பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

A/L 88 (Day Class)

★ PHYSICS ★

மின்னோட்டத்தில் ஏற்படும் விளைவுகள்

(புதன்-வெள்ளி 3 p.m.)

நீர்நிலையியல்

[புதன்-வெள்ளி 4 p.m.]

ஆசிரியர்

R. சத்தியசிலன்

New Master Institute

B.M.C. lane JAFFNA.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 2.00

A L 88 [Day Class]

★ PHYSICS ★

சடப்பொருளின் இயல்புகள்

ஆரம்பம்: 9 6 88

வியா 1 p.m.

(தி-செ-வி 1 p.m.)

ஆசிரியர்;

R. சத்தியசிலன்

New Master Institute

B.M.C. lane, JAFFNA

மடல் 3 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு வைகாசி மீ 26 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1408 ஷவ்வால் பிறை 22 (08-06-1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்: 100

அமைதிப் படையினரின் மாநாடுகளை

# பிரசைகள் குழுக்கள் பகிஷ்கரிக்க முடிவு!



சுன்னாகத்தில் நேற்று முன் தினம் ஈரோஸ் ஒழுங்கு செய்திருந்த வீதி மறிப்புப் போராட்டத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள். படம்;- அகில்ராஜ்

## யுத்த நிறுத்தம் குறித்து இந்திய அரசு நடவடிக்கை எடுக்காததற்கு ஆட்சேபம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

அமைதிப்படையினர் நடத்தும் மாநாடுகள், கலந்துரையாடல்களை பகிஷ்கரிப்பதென வடக்கு கிழக்கு பிரசைகள் குழுக்களின் இணைப்புக்குழு முடிவு செய்திருக்கிறது.

யுத்தநிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு இந்திய அரசு நடவடிக்கை எடுக்காததற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் முகமாகவே பிரசைகள் இணைப்புக்குழு இந்த முடிவை எடுத்திருக்கிறது.

தங்களுடைய இந்த முடிவை, குழுவினர், யாழ் நகரக் கொமாண்டர் பிரிகேடியர் சாலோன் அமைதிப்படைப் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் சந்தேஷ் பாண்டே ஆகியோர் ஊடாக இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்திக்குக் கடிதமூலம் அறிவித்திருக்கின்றனர்.

வடக்கு, கிழக்கு பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழுவினர் இம்மாதம் இரண்டாம் திகதியிட்டு, பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிய கடிதத்தின் விபரம் வருமாறு:-

இலங்கை இந்தியத் தூதுவர், அமைதிப்படையின் பொறுப்பதிகாரி, நகரக் கொமாண்டர் ஆகியோர் ஊடாக, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கும் பொருட்டு, காலவரையறை இல்லாத யுத்த நிறுத்தம் ஒன்றைப் பிரகடனப் படுத்துமாறு தங்களைப் பல தடவைகள் நாம் கேட்டிருந்தோம். எமது கோரிக்கையை நிறைவேற்ற எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

எமது விண்ணப்பம்-கோரிக்கை- வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களில் பெரும்பாலானவர்களின் கருத்தைப் பிரதிபலிப்பதாக நாம் தங்களுக்குத் தெளிவுபடுத்தியிருந்தோம்.

தமிழர்களின் நலன்களையும், உரிமைகளையும் பாதுகாப்பதற்காக வே தான் இலங்கைக்கு வந்ததாக இந்தியா உரிமை கொண்டாடிய போதி (6 ஆம் பக்கம் பார்க்க)

பிரசைகள் குழுத் தலைவர் கொலை:

## இன்று துக்கதினம் அனுஷ்டிக்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 8

மட்டக்களப்பு பிரசைகள் குழுவின் தலைவர் வண. பிதா சந்திரா பெர்ணாண்டோவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில், இன்று புதன்கிழமை துக்கதினம் அனுஷ்டிக்குமாறு வடக்கு -கிழக்கு பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்குக் கிழக்குப் பகுதி எங்கும் இன்று துக்கம் அனுஷ்டிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

பிதா சந்திரா பெர்ணாண்டோவின் மரணம் அதிர்ச்சியும், கவலையும் தரும் ஒரு சம்பவம் என்று ப. குழுக்களின் இணைப்புக் குழுவினர் தெரிவித்தனர்.

அவர் மக்களுக்குச் சேவை செய்த தொண்டர் சமாதானத்துக்காக முன்னின்று உழைத்தவர் என்றும் குழுவினர் தமது (6 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் முல்லைத்தீவு நேரடி பஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 8

நீண்ட தூரப்பிரயாணிகளின் நன்மை கருதி இ. போ. சபை காங்கேசன்துறையிலிருந்து முல்லைத்தீவுக்கும், முல்லைத்தீவிலிருந்து காங்கேசன்துறைக்கும், பரந்தன், புதுக்குடியிருப்புக்கு ஊடாக புதிய நேரடி பஸ்சேவை ஒன்றை இம்மாதம் 1 ஆம் திகதி [6 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ்-நகரில் வெள்ளியன்று ஈரோஸ் வீதி மறிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 8

ஈரோஸ் இயக்கத்தின் இரண்டாம் கட்ட எதிர்ப்புப் போராட்டம் எதிர் வரும் வெள்ளிக்கிழமை பத்தாம் திகதி யாழ்ப்பாண நகரத்தில் நடைபெற உள்ளது.

உடனடியான யுத்த நிறுத்தம், இதய சுத்தியான பேச்சுவார்த்தை இவற்றை வலியுறுத்தும் விதத்தில் ஈரோஸ் இயக்கத்தின் இரண்டாம் கட்டப் போராட்டம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாவதாக இயக்க வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாண நகரில் (6 ஆம் பக்கம் பார்க்க)

## மேற்கு ஜெர்மனி மேலும் நிதி உதவி

### ஐ. நா. ஊடாக வழங்கப்படும்

கொழும்பு, ஜூன் 8

இந்தியாவில் இருந்து திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளின் புனர்வாழ்வுப் பணிகளுக்கு மேற்கு ஜேர்மன் அரசு மேலும் 36 லட்சம் ரூபாவை வழங்கியிருக்கிறது.

ஐ. நா. அகதிகள் ஆணையாளர் ஊடாக இந்நிதி புனர்வாழ்வுப்பணிகளுக்குச் செலவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வுப் பணிகளுக்கு மேற்கு ஜேர்மன் அரசு இதுவரை அளித்த உதவிப்பணம் ஒருகோடி எட்டு லட்சம் ரூபா எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ரயில் பாதைத்திருத்த வேலைகள் மற்றும் திட்டங்களுக்கு மேற்கு ஜேர்மன் அரசு ஏற்கனவே 340 லட்சம் ரூபாவை அளித்துள்ளது தெரிகிறது. [அ.எ]

## அமைதிப்படையின் ஒரு பிரிவு நேற்றுத் தாயகம் திரும்பியது

கொழும்பு, ஜூன் 8

இந்திய அமைதிப் படையின் ஒருபிரிவு போர்க்கருவிகள், தளபாடங்கள் சகிதம் நேற்றுக்காலை திருகோணமலையில் இருந்து தாயகம் புறப்பட்டது.

இது தொடர்பான வழியனுப்பு வைபவம் திருகோணமலைத் துறைமுகத்தில் இடம்பெற்றது.

இந்தியா திரும்பிய இராணுவத்தினரின் எண்ணிக்கை, போர்க்கருவிகள் ஆகியவை பற்றிய விவரங்களை வெளியிட இருந்த அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

எனினும் திருப்பியனுப்பப்பட்ட போர்க் கருவிகளில் கவச வாகனங்களும் ட்ரக் வண்டிகளும் அடங்கியிருந்தன என தெரிவிக்கப்பட்டது.

வழியனுப்பு நிகழ்ச்சியில் இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற், இந்திய அமைதிப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஏ. எஸ். கல்கத், இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிக்கல, கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வழியனுப்பும் நிகழ்ச்சி பற்றி செய்தி சேகரிக்கச் சென்றிருந்த செய்தியாளர்கள் திருப்பியனுப்பப்படும் துருப்புகள் எண்ணிக்கை குறித்து அதிகாரிகளிடம் துருவித் துருவிக் கேட்டனர்.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சேபால ஆட்டிக்கல இது குறித்துக் கூறியதாவது -

இன்று எவ்வளவு துருப்புக்கள் திரும்பிச் செல்கின்றன என்பதல்ல முக்கியம்.

இந்தியத் துருப்புக்கள் திரும்பிச்செல்ல ஆரம்பித்துவிட்டன என்பதே முக்கியமானது - என்றார்.

தேவேளை "தேவையில்லாத துருப்புக்களை திருப்பி அனுப்புகின்றன" என இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

துருப்புக்களை விலக்கிக் கொள்வதில் இருந்து (6 ஆம் பக்கம் பார்க்க)

## மக்களை மிரட்டி பணம் பறிக்க முயன்ற நால்வர் நகரில் கைது

### அமைதிப்படை நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 8

பொதுமக்களை மிரட்டி பணம் பறிக்க முயன்ற நால்வரை அமைதிப் படையினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்தனர்.

யாழ்ப்பாணம் நகரில் வைத்து ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட இவர்கள் நால்வரும் ரெலோ இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என அமைதிப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது சம்பந்தமாக அமைதிப்படையின் பலாலி தலைமை அலுவலகத்திலிருந்து வெளியிடப்பட்ட பத்திரிகைக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

பொதுமக்களை மிரட்டிப் பணம் பறிக்க முயன்ற நான்கு ரெலோ இயக்க நபர்களைக் கடந்த ஞாயிறு கிழமை இந் [6 ஆம் பக்கம் பார்க்க]

## புதிதாக ஏழாயிரம் ஆசிரியர்

கொழும்பு, ஜூன் 8

புதிதாக ஏழாயிரம் ஆசிரியர்கள் நியமனஞ் செய்யப்படுவர்

பகல் கல்வி அமைச்சர் சமரவீர வீரவன்னி, அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் நேற்று அறிவித்தார்.

இதற்கான நிதி ஒதுக்கப்பட்டு விட்டதாகவும் அவர் சொன்னார். [அ-எ]

## வவுனியாவில் 13 ஆம் திகதி வரை கச்சேரி, வங்கிகள் நீதிமன்றம் இயங்க விடுதலைப் புலிகள் தடை

வவுனியா, ஜூன் 8

திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை வவுனியாக்கச்சேரி உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், வங்கிகள், நீதிமன்றம் என்பன இயங்கக்கூடாதென்று தமிழீழ விடுதலைப் புலிகள் தடைவிதித்துள்ளனர்.

இதற்கான அறிவிப்புகள் கடிதம் மூலமாக கிடைத்ததும், திங்கட்கிழமை வழமைபோல அலுவல்களுக்காகத் திறந்த சகல அலுவலகங்களும் மூடப்பட்டன. ஊழியர்கள் வீடுகளுக்குத் திரும்பினர்கள்.

கல்விப்பகுதி, தபால் பகுதி, சுகாதாரப்பகுதி என்பன மாத்திரம் இயங்கின. ரயில், பஸ் போக்குவரத்துகள் வழக்கம் போல இடம்பெற்றன.

இதேவேளையில் வவுனியா வர்த்தகர் சங்கச் செயலாளர் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் தமது பதவியை இராஜினாமா செய்துள்ளதாக அறிவித்துள்ளார். [இ-164]

முச்சந்தி முரளி





மேற்கு ஜெர்மனியை எல்லா நாடுகளும் பின்பற்றினால் எவ்வளவு நல்லாயிருக்கும் ...!

ஈழத் தமிழர் பிரச்சினை:

## தீர்வு காண்பதற்கு புதிய முயற்சி தேவை; பந்த் விஜயம் பயனற்றது

### தமிழ் ஈழ மக்கள் மன்றம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 8

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் வரையறைக்குள் இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வு காண இடமிருக்கிறது. அதற்கு தமிழீழ விடுதலைப்புலிகளுடனும், சம்பந்தப்பட்ட மற்றையோருடனும், இரு அரசாங்கங்களும் பேசித் தீர்வு காண்பதற்கு ஒரு புதிய முயற்சி தேவை.

இவ்வாறு தமிழ் ஈழ மக்கள் மன்றம் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு பந்தின் இலங்கை விஜயம் தீர்வுக்கான அறிகுறி எதையும் காட்டவில்லை என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அறிக்கை விபரம் வருமாறு:— ஈழத் தமிழராகிய நாம் இந்தியாவிடம், எதிர்பார்க்கும் மத்தியஸ்த, ஒப்பந்த உத்தரவாத நிலையிலிருந்து வெகு தொலைவில்தான் இன்னும் இந்திய அரசு இருக்கின்றது.

அரசமைப்பின் 13 வது திருத்தத்தையும்; மாகாண சபைகள் சட்டத்தினையும், இனப்பிரச்சனைக்கான நியாயமான தீர்வாக கொள்ள முயல்வது அர்த்தமற்ற செயலாகும். இதனை ஏற்கனவே நாம் சுட்டிக் காட்டியிருக்கின்றோம்.

பழைய பல்லவி

இருந்தும் இந்திய அரசு பழைய பல்லவியையே- இப்போதும் ஜூலை மாதத்தில் மாகாண சபை தேர்தல்கள் என்று பாடுவதையிட்டு நாம் ஆழ்ந்த வருத்தம் அடைகின்றோம்.

இந்திய அரசின் நிலைப்பாட்டில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை; அப்படியென்றால் தமிழீழ விடுதலைப்புலிகள் ஏன் ஒப்பந்தத்தை ஏற்று ஆயுதங்களை ஒப்படைப்பதாயின் அதன் பின் இந்தியாவுடன் என்னதான் பேச இருக்கிறது என்பது எமக்கு விளங்கவில்லை.

நிபந்தனைகளை ஏற்ற பின் பேச்சுவார்த்தை என்ற பேச்சு ஏன்? அது வெறும் கண்துடைப்பு பேச்சாகத்தான் இருக்கும் என்று கருதாமலிருக்க முடியவில்லை (3 ஆம் பக்கம் பார்க்க)

சுபதினம்

8-6-1988

வைகாசி 26

புதன்கிழமை

சுபநேரம்:

4 22 முதல் 5 52 வரை

ராகுகாலம்:

11 52 முதல் 1 22 வரை

இலை பசலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

நவமி முன்னிரவு 10 31 வரை

## நாளைய தேர்தலிலும் ஐ.தே. கட்சியே வெல்லும் என்று ஜனாதிபதி நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 8

நாளை நடக்கும் தென் மாகாண சபைத் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சியே வெற்றி ஈட்டும்

இவ்வாறு நேற்று நடந்த அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தியப்படையினர் வாபஸ்பெறுவது பற்றிய செய்தியை அவர் கூட்டத்தில் வெளியிட்டார்

அங்கு அவர் பேசியதாவது;-

ஆறு மாகாணசபைகளையும் ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றி விட்டது.

தென் மாகாண சபையையும் எமது கட்சி கைப்பற்றும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு

நடந்து முடிந்த தேர்தலில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஒழுங்கீனங்கள் பற்றிய முறைப் 6ஆம் பக்கம் பார்க்க

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சகலவிதமான T. V. பூஸ்ரர், அன்ரனா வயர், றேடியோ, றேடியோ உதிரிப்பாகங்கள் கைக் கடிகாரங்கள், சுவர்க்கடிகாரங்கள், மின்விசிறிகள் லைற்றர் மின் அடுப்புகள் T. V ஸ்ராண்ட் எவர்சில்வர் பொருட்கள் றைஸ்குக்கர் எலெக்றிக் கேற்றில்களும் கரம் போட், விளையாட்டுப் பொருட்கள் அன்பளிப்புப் பொருட்கள் மற்றும் ரவலிங் பாக்ஸ், பாடசாலைபாக்ஸ் வாங்குவதற்கு நாடுங்கள். New City Traders 135, Kasturiar Road Jaffna (C 5299)

Sausages எல்லாவகையான Sausages பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். [4075]

அத்தியடிப் பிள்ளையார் கோவில் சந்தியில் வீடுடன் கூடிய 3/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: Mrs M இரத்தினசாமி 1/8 கம்பலவாண் வீதி யாழ்ப்பாணம (C5379)

ஐந்தலை வீடு, இருகேணி, கிணறு, பலசலகூடத்துடன் 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்வோர் 15/4 சுவாமியார் வீதி கொழும்புத்துறை என்ற விலாசத்தில் பி.ப 1 மணிக்குப் பின் சந்திக்கவும். (4371)

### மலிவு விற்பனை

தொழிற்சாலையில் முதலடைந்த பாத்திரங்கள் மலிவு விலையில் கொடுக்கப்படும் இடம்; பேள்லோகத் தொழிற்சாலை 60, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில் 7-6-88 முதல் 10-6 88 வரை) (4379)

### வீடு விற்பனைக்கு

மானிப்பாய் லோட்டன் வீதி ஒழுங்கையில் இரண்டு பரப்புக் காணியுடன் பூர்த்தியாகாத் நிலையில் உள்ள வீடும் விற்பனைக்குண்டு 4 அறைகள் கோல், குசினி, பாத்றூம், மலசலகூடம், அடங்கியவை. தொடர்பு: த. கர்மரட்ணம் லோட்டன் வீதி மானிப்பாய் (4190)

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

Hisex Golden Comet பிறவுண் முட்டைக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகள், Golden Come இரண்டு மாத ஒருமாத பிறவுன் முட்டைக்குஞ்சுகள் (தடுப்பூசி போடப்பட்டவை) 10ந் திகதி வெள்ளிக் கிழமை விநியோகிக்கப்படும் முன் கூட்டியே பதிவு செய்க சற்குணராஜ & பிறதர்ஸ் பிரம்படி லேன் கொக்குவில். (4189)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hisex, Golden Comet பிறவுண் முட்டைக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Hy - Line வெள்ளை, கறுப்பு முட்டைக்குஞ்சுகள், Hybro புறொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா அன் பிறதர்ஸ் பிரம்படிலேன், கொக்குவில். (4151)

## விற்பனைக்கு

Broilor இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம்செய்துகொடுக்கப்படும். தொடர்பு: Nallur Farm Centre. C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19 முருகேசன் லேன் நல்லூர். (4073)

Lohmann வெள்ளை, சிகப்பு முட்டைக் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள், Golden Comet சிகப்பு முட்டை குஞ்சுகள் சேவல் குஞ்சுகள், Hy- Line வெள்ளை கறுப்பு முட்டைக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் விநியோகிக்கப்படும், உடன் முன் கூட்டியே பதிவு செய்யவும் Nallur Farm Centre C/o, நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசன் லேன் நல்லூர். (4074)

## தேவை

Chinese Restaurant இல் வேலைசெய்வதற்கு அனுபவம் வாய்ந்த Waiter தேவை. தொடர்பு கொள்ளவும்: 45 இராசாவின் தோட்டம் வீதி, (றயில்வே கடவை அருகாமையில்) யாழ்ப்பணம். நேரம் 9-11 a.m. (4183)

## சேவை

### TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக் கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna (Samy & Co— Shabra அருகாமையில்) (C5300)

## வகுப்புகள்

உள்நாடு வெளிநாடு களில் வேலைவாய்ப்பு பெறுவதற்கு ஒரிய சந்தர்ப்பம் Radio- TV Air Conditioning - Refrigeration வயறிங் வெல்டிங் மோட்டமெக்கனிசம் வைண்டிங் பிளம்பிங் Typing Spoken English குறுகிய காலத்தில் குறைந்த கட்டணத்துடன் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பமாகின்றன. சான்றிதழ் பெறுமதியானது Vispa Engineering Aid Hall 328, நாவலர் வீதி, ஆனைப்பந்திச் சந்திக்கு அருகாமையில (4180)

## வாடகைக்கு

நெல்லியடிச் சந்தியில் 12'X60' விஸ்திரணமுள்ள கடை உடனடியாக குத்தகைக்கு கொடுக்கப்படும் தொடர்பு A E. ஜெயசிங்கம் அந்தோனியார் கோவிலடி சரஸ்வதி வித்தியாலய ஒழுங்கை கரவெட்டி. [3440]

### புதிய நாவல்

காதல் இது ஒரு புனிதமான அன்பைக் குறிக்கும் சொல் இந்த மென்மையான சொல்லுக்கு இலக்கணம் கூறும் கதைகள் எப்போதோ ஒன்று வருவதுண்டு அந்த வரிசையில் -ராதையின் நெஞ்சம தனிப்பிரதி 30/- வியாபாரிகளுக்கு தகுந்த கழிவுண்டு. பூபாலசிங்கம்-யாழ்ப்பாணம் (4192)

### தவறிவிட்டது

K P கனகலிங்கம் என்பவரின் F 066596 கடவைச் சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரம் 280953 தவறிவிட்டது கண்டெடுத்தோர் தொடர்பு கொள்ளவும். பொன்னசம்' சங்கானை கிழக்கு (4191)

சுப்பையா கணேச பிள்ளை (226900029 V) கனகம்மா கணேசபிள்ளை ஆகிய இருவரதும் அடையாள அட்டைகள் கொக்குவில் காங்கேசன்துறை மினி பஸ்ஸில் 5-6-88 அன்று தொலைந்து விட்டன (வயது எள்ளன எமது அடையாள அட்டைகள் புதிதாக எடுப்பதில் சிரமம் இருப்பதால்) தயவு செய்து கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கு மாறு கேட்டுக் கொள்கிறோம். (4377)

### சிறந்த தேயிலை

சில்லறையாகவும், மொத்தமாகவும் அதி உன்னத சுவை அதிக சாயம் கொண்ட தேயிலை விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கு கூடிய சலுகை காட்டப்படும். 25og 100g 50gr பக் கெட்டுகளிலும் பெற்றுக் கொள்ளலாம் தொடர்பு: கல்வயல் வீதி நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி கண்டி வீதியிலிருந்து 200 யார் தொலைவில் உள்ளது (4154)

### றேனியோ- தட்டச்சு

தமிழ், ஆங்கிலம் தட்டச்சு Type writing றுனியோ வேலைகள் மற்றும் சகலவிதமான அச்சுவேலைகளும் குறித்த வணையில சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும் தய அச்சகம் இல: 138, நாவலர் றோட், மனோகரா சந்தி, யாழ்ப்பாணம (C5216)

## ஆறும மாத நினைவு அஞ்சலி



தோற்றம் 5. 1. 1911
மறைவு: 14. 12 1987

**தம்பையா வைத்திலிங்கம் சந்தையா**

(இளைப்பாறிய அரச வேலைப்பகுதி மேற்பார்வையாளர், (P.W D ஓவசியர்)

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய் பாசத்துடன் எம்மை எல்லம் வழிநடத்திச்சென்ற எமது அன்புத்தெய்வமே! உங்கள் நினைவு என்றும் எது உள்ளத்தை விட்டுஅகலாது தங்களின் தூப அன்பினை என்றும் நினைவு கூர்வதோடு தங்களின் ஆத்ம சாந்திக் காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மறவா மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

No. 1, பண்டாரக்குளம் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். (4127)

# திருமண நன்றி நவிலல்

கடந்த 27-5 88 அன்று நடைபெற்ற. எமது மகன் வசந்தமோகனதும் எமது மகள் பிறேமலதாவினதும் திருமண வைபவத்திற்கு வருகை தந்து சிறப்பித்து ஆசீர்வதித்தமைக்கு மனங் கனிந்த நன்றிகள்.

திரு. திருமதி க. முருகரட்ணம், J. P
கந்தரமடம்

திரு. திருமதி இ. லக்ஷ்மிநாதன்
தெல்லிப்பழை

[C-5387]

# 31 வது நாள் நினைவஞ்சலி



**திரு. நாகலிங்கம் பாலகிருஷ்ணர் (பத்தர்)**

அன்னையின் மடியில்: 9-11-1920 — ஆண்டவன் அடியில் 9-5 1988

ஊரார் போற்றி நிற்க உத்தமனாய் வாழ்ந்திருந்து குடும்பத்தின் ஒளிவிளக்காய் அன்பு மொழி பேசி எங்களை வழி நடத்திய அன்புத் தெய்வமே! ஐயா உங்கள் புன் சிரிப்பு தவழும் முகத்தை இனி எப்போ காண்போம்? கண்ணை இமை காப்பது போல் என்றும் எங்களைக் காத்து நின்ற அன்பு ஐயாவே! விலை மதிக்க முடியாத முத்தே ஐயா உங்கள் நினைவு என்றும் எங்கள் இதயங்களை விட்டு நீங்காது. உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!
உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
(4381)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தையிட்டி கிழக்கைச் சேர்ந்த
**அமரர் சின்னத்துரை இரவீந்திரன்**

ஆண்டவன் படைப்பு: 15-12-1954
அநியாய உயிர் பறிப்பு: 8-06-1987

அன்பின் திருவுருவாய் செழிந்து அன்புக்கு ஓர் அண்ணனாக விளங்கி பொது வேலையில் என ஆயிர நண்பனாக செயல்பட்ட நீர் எங்களை விட்டுப் பிரிந்து இன்று ஓர் ஆண்டு முடிவடைகிறது இன்றைய தினத்தில் உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

உமது பிரிவால் துன்புறும்:
அன்புத் தம்பி
சிவன்.
தையிட்டி கிழக்கு,
காங்கேசன்துறை.
(4126)

## இளம்பெண் சுடப்பட்டு மரணம்

வடமராட்சி, ஜூன் 8

இமையாணன் குஞ்சர் கடையடியில் இளம் பெண் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இமையாணன் வாசியான இராசையா சுதா (வயது 23) என்பவரே இறந்தவர் ஆவார். திங்கள் இரவு இச்சம்பவம் நடைபெற்றது.

[இ-160]

## கிளிநொச்சியில் ஆசிரியர் கிராமம்

கிளிநொச்சி ஜூன் 8

கல்வித் திணைக்கள ஊழியர்களின் கூட்டுறவு கடன் உதவிச் சங்கம் அமுல் நடத்திவரும் ஆசிரியர் கிராமத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சியில் ஆசிரியர் கிராமம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் கிளிநொச்சி பிரதிநிதி திரு சனக மகேந்திரா ஈடுபட்டுள்ளார். [இ-சி-76]

## மீண்டும் பால பண்டித வகுப்புகள்

யாழ்ப்பாணம் ஜூன் 8

நாட்டு நிலைமை காரணமாக கடந்த மாதங்களில் நடத்தப்படாத இலவச பால பண்டித வகுப்புக்கள் மீண்டும் 11ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

நாவலர் சைவத்தமிழ் பண்பாட்டு நிலயத்தினர் சனி, ஞாயிறு ஆகிய வார இறுதி நாட்களில் இலவசமாக இந்த வகுப்புக்களை நடத்திவந்தனர்.

மீண்டும் பிரவேச, பால பண்டித வகுப்புகளை, 11ஆம் திகதியில் இருந்து வண்ணார் பண்ணை நாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில் நடத்துவதற்கு கல்வி அதிகாரி திரு க கந்தசாமி நடவடிக்கை எடுத்துள்ளார். (து-5)

# பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா
★ குவைத்

**Saudi Arabia Open Visa**

Farmers
(25 வயதிற்கு மேற்பட்டவர்கள்)
சம்பளம் 500 + 100
ஒப்பந்தம் 3 வருடங்கள்
(10 நாட்களுக்குள் பயணம்)

★ சவூதி அரேபியா

ரெயில்வே கிளீனேர்ஸ்
பாடசாலை கிளீனேர்ஸ்
எயர்போர்ட் கிளீனேர்ஸ்
சம்பளம் 350 + 100
ஒப்பந்தம் 2 வருடங்கள்
சாரதி (H V Driver)
சம்பளம் 600 + 100
ஒப்பந்தம் 2 வருடங்கள்

★ குவைத்

ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்
இன்ரநாஷனல் கிளீனேர்ஸ்
சம்பளம் 30 K. D
ஒப்பந்தம் 2 வருடங்கள்

★ சவூதிக்கு போக கடவுச்சீட்டு தந்தவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**முற்பணம் அறவிடப்படமாட்டாது**

● காரியாலயம் எல்லா நாட்களிலும் திறக்கப்படும்.

தொடர்பு:

**கோல்டன் ரவல்ஸ் அன் ரூர்ஸ்**
புகையிரதநிலைய வீதி
சுன்னாகம்.

கிளை இல 1
**கோல்டன் ரவல்ஸ் அன் ரூர்ஸ்**
பயிலங்காடு,
ஏழாலை.

(C-5386)

# Mack Travels

## விமான சேவை

### மீண்டும் யாழ். மக்கள் வேண்டுகோளுக்கிணங்க

- யாழ்- கொழும்பு விமான சேவை தினசரி ஒழுங்காக துரிதமாக குறைந்த கட்டணத்தில் செயல்படுகின்றது.
- ஏமாற்றத்தை தவிர்க்க ஆசனங்களை ஒரு கிழமைக்கு முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.
- ஒவ்வொரு பிரயாணிகளும் ஐந்து லட்சம் ரூபாய்க்கு காப்புறுதி செய்யப்பட்டுள்ளார்கள்.
- உலகில் எந்த நாட்டிற்கும் டிக்கற் ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.
- அனுபவம் வாய்ந்த உத்தியோகஸ்தர்கள் உங்கள் தேவையைப் பூர்த்தி செய்வார்கள்.

**MACK TRAVELS**

இல. 8, முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(C. 5392)

★ வியாபாரம் பெருக
★ விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சியில்

# மலத்தியோன் விசுறும் வேலை ஆரம்பம்

## மலேரியா தடுப்புத் துரிதம்

கிளிநொச்சி, ஜூன் 8

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்து வரும் நுளம்பின் தாக்கத்தை தவிர்க்க கிளிநொச்சி மாவட்டம் பூராகவும் மலத்தியோன் விசிறும்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரியின் நிர்வாகத்தின் கீழ் உள்ள கிளிநொச்சி பிராந்திய காரியாலயத்துக்கு சுமார் 600 பெட்டி மலத்தியோன் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மலேரியா தடுப்பு இயக்கத்தினர் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சுமார் 16 வெளிக்கள உத்தியோகத்தர்கள் மூலம் மலத்தியோன் விசிறும் பணியை ஆரம்பித்துள்ளனர்.

கிளிநொச்சி அரசாங்க அதிபரின் முயற்சியால் வவுனியாவில் இருந்து எடுத்து வரப்பட்ட மலத்தியோன் ஒரு சுற்றுவிசுறலுக்கே போதுமானது எனவும் கிளிநொச்சி மாவட்டம் பூராகவும் ஒரு சுற்று விசுறுவதற்கு சுமார் 610 பெட்டிகள் தேவை எனவும் தெரிவிக்கப்படுகிறது (இ-76)

## உடல் வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்துக்கும் விளையாட்டுக்கள் அவசியம்

இளைஞர்கள் யுவதிகள் தங்கள் உடல் வளர்ச்சிக்கும் தேக ஆரோக்கியத்துக்கும் விளையாட்டுத்துறையில் ஈடுபட வேண்டும்.

மண்டைதீவு வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்துக்கு தலைமை வகித்துப் பேசிய முன்னாள் கிராமோதய சபைத் தலைவர் திரு. எஸ். இராசலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்; வாழ்க்கையில் சுறுசுறுப்பாக செயல்படுவதற்கு திடகாத்திரமான உடல் வளர்ச்சி ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டும்.

அப்படி இருந்தால் நம்மை ஒருபோதும் நோய் அணுகாது சோம்பேறித்தனம் எம்மை விட்டுத்தானாக மறைந்து விடும் என்றார். (இ-88)

## மினிபஸ் சேவை ஊழியர்

### நலன்புரிச் சங்கம் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 8

வடபிரதேச மினிபஸ் சேவை ஊழியர் நலன்புரிச் சங்கம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப சங்கத்தின் கீழ் இயங்கும் 32 பஞ்சாயத்துக்களில் இருந்தும் புதிய அமைப்பின் பிரகாரம் பிரதிநிதிகள் நிர்வாகத்தில் இடம்பெறுவர்.

இதன்படி ஒவ்வோர் பஞ்சாயத்திலும் இருந்து ஐந்து சாரதிகள், ஐந்து நடத்துனர்கள், 3 நேரக்கணிப்பாளர்கள் பொதுச் சபையில் அங்கம் வகிப்பர்.

இந்தப் பொதுச்சபை நிர்வாகசபையைத் தெரிவுசெய்யும்.

இவ்வாறான தீர்மானம் அண்மையில் நடந்த மேற்படி சங்கக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

நலன்புரிச் சங்கத் தலைவர் திரு. பொன்- தம்பித்துரை தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

## முதலாம் தர கிராம சேவை அலுவலர்

நெடுந்தீவு மேற்கு கிராம சேவை அலுவலர் திரு. வ. நடராசா முதலாம் தர கிராம சேவை அலுவலராகத் தரம் உயர்த்தப் பட்டுள்ளார்.

25 வருடங்களாக பதவியில் இருக்கும் திரு நடராசா வலவெட்டி, புங்குடுதீவு, நெடுந்தீவு ஆகிய இடங்களில கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-111)

## கொள்வனவு விற்பனவு நிலையம்

வேலணை, ஜூன் 8

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான கொள்வனவு விற்பனவு நிலையமும், இப்பிரிவுக்கான பிராந்திய அலுவலகமும் எதிர்வரும் 10 ஆம் திகதி வேலணையில் திறந்துவைக்கப்படும்.

வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. சி சடாட்சர சண்முகதாஸ் அவற்றைத்திறந்து வைப்பார். (இ-167)

## சிரமதானம்

மண்டைதீவு, ஜூன் 8

திருநெல்வேலி சிறுவர் நிலறவாழ்வு இல்ல சுற்றாடல சிரமதான மூலம் துப்பரவு செய்யப்பட்டுள்ளது.

சைவ விருத்திச் சங்க செயலாளர் திரு. இரா. சுந்தரம் தலைமையில் இச்சிரமதானப்பணி நடைபெற்றது. சிரமதானத்துக்கு வேண்டிய மண்வெட்டிகள், தாச்சிசட்டிகள் போன்ற உபகரணங்களை மில்க்வைற் அதிபர் திரு க. கனகராசா கொடுத்து உதவினார். (இ88)

# பரந்தன் தொழிற்சாலை: திறக்கும் சூழ்நிலை இல்லை

## அதிகாரி சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 8

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை தற்காலிகமாகவே மூடப்பட்டுள்ளது. அதனைத் திறக்கக்கூடிய சூழ்நிலை இப்போது அங்கில்லை.

இவ்வாறு கைத்தொழில் விஞ்ஞான அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

இது குறித்து அவர் மேலும் சொன்னதாவது:-

இத்தொழிற்சாலை 40 வருட பழமையானது பொருளாதார ரீதியில் அத்தொழிற்சாலை இயங்கக்கூடியதா என்பதைப் பொறுத்துத்தான் அதை மீண்டும் திறப்பது பற்றிய தீர்மானம் எடுக்கப்படும்.

புதிய இரசாயனத் தொழிற்சாலை ஒன்றை நிறுவும் சாத்தியம் ஆராயப்பட்டு வருகின்றது. அது எந்த இடத்தில் அமைக்கப்படும் என்பது தீர்மானிக்கப்படவில்லை.

புனரமைப்புத் திட்டத்தின் கீழ்பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையைச் சேர்க்க வேண்டாம் என்று உலகவங்கியை கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு வற்புறுத்தியது. அதனை உலகவங்கியினர் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

பரந்தன் தொழிற்சாலையில் 475 க்கு மேற்பட்ட ஊழியர்கள் உள்ளனர்.

புதிய தொழிற்சாலை அமைக்கப்படும் பட்சத்தில் இவர்களுக்கு ஏதாவது ஒருவகையான வேலைவாய்ப்பு வழங்கப்படுவது கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றார். (அ-எ)

## சனசமூக நிலைய நன்கொடைப் பணத்தை அதிகரிக்கக் கோரிக்கை

இதுவரை தமது நன்கொடைப் பணத்தைப் பெறாத சனசமூக நிலையங்களுக்குரிய பணம் அந்த அந்தப் பகுதியில் திறமையாக இயங்கும் சனசமூகநிலையங்களுக்கு பகிர்ந்து அளிக்கவேண்டும்.

நல்லமுறையில் இயங்கி வரும் "ஏ" பிரிவு சனசமூக நிலையங்களுக்கான நன்கொடைப்பணம் 600 ரூபா, 1000 ரூபாவாக உயர்த்தப்படல் வேண்டும்.

மேற்கண்டவாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளரைக்கோரும் தீர்மானம் யாழ் மாவட்ட சனசமூக நிலைய சமாசத்தின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இத்தக் கூட்டம் ஆரியகுளம் சன்மார்க்க சனசமூக நிலைய மண்டபத்தில் திரு இ சற்குருநாதன் தலைமையில் நடைபெற்றது இ-ச-167)

## கல்வியுடன் உடலுறுதி இளைஞருக்கு அவசியம்

நாட்டின் செல்வங்கள் இளைஞர்கள். எனவே இளைஞர்கள் கல்வியுடன் உடலுறுதி மிக்கவர்களாக இருத்தல் வேண்டும். நாட்டின் சுபீட்சமும் சிறப்பான எதிர்காலமும் உறுதியான இளந்தலைமுறையின் உழைப்பினாலேயே மிளிரும்.

நெடுந்தீவு கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நெடுந்தீவு வைத்திய அதிகாரி டாக்டர் வி. யோகேஸ்வரன் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; வெற்றி பெற்றவர்கள் மமதையும், தோல்வியுற்றவர்கள் தடுமாற்றமும் கொள்ளக் கூடாது. வாழ்க்கையில் சிறப்புக்குக் கல்வி எப்படியோ அப்படியே உடற் பயிற்சியும் அவசியமாகும் என்றார்.

சிறப்பு விருந்தினர்களாக நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு நா இராமச்சந்திரன், விஞ்ஞானக் கலவிச்சேவை ஆசிரியர் திரு. இரா ஜெயசிலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கொத்தணி அதிபர் திரு இரா. சின்னத்தம்பி தனது தலைமை உரையில் கொத்தணி அமைப்பினால் கல்வித் துறையில் முன்னேற்றம் ஏற்பட வாய்ப்பு இருப்பதுடன் இதுவரைகாலமும் விளையாட்டுப் போட்டிகளை நடத்தமுடியாத சிறிய பாடசாலைகளும் போட்டியில் பங்குபற்றக்கூடியதாக இருக்கிறது என்றார். [இ-111]


## கணக்கியல் கல்வி

**A. A. T.**

**(Sri Lanka) Stage I, II**

TAMIL & ENGLISH MEDIUM

**I. A. B, C. I. M. A.**

ஆரம்பம் 11. 6. 1988 சனி பி.ப.2மணி

விரிவுரையாளர்கள்:

திரு தே. ஜெயராமன்

திரு W. J. சூசைரட்ணம்

திரு. ஜெயரட்ணம்

விபரங்களுக்கு:

உதவிப்பதிவாளர்

பட்டப்படிப்புகள் கல்லூரி,

148/1, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

(C 5378)


தமிழ் - முஸ்லிம்

# ஒற்றுமை இன்றேல் அபிவிருத்தி இருக்காது

## முஸ்லிம் பிரமுகர் கருத்து

அம்பாறை, ஜூன் 8

தமிழ் - முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமையும் பரஸ்பரம் நல்லெண்ணமும் வளர வேண்டும். அன்றேல் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எவ்வித அபிவிருத்தியையும் ஏற்படுத்த முடியாது

டொமினிக்கன் குடியரசுக்கான இலங்கையின் கௌரவ பிரதிநிதியும் அகில இலங்கை முஸ்லிம் அகதிகள் நிவாரண, புனர்வாழ்வு நிலையத்தலைவருமான அல்-ஹஜ் அப்துல் டபிள்யூ. எம். அமீர் உதயனுக்கு அளித்த பேட்டி ஒன்றில் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில், அண்மைய சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் கிராமங்களையும், அகதி முகாம்களிலுள்ள முஸ்லிம அகதிகளையும அல்-ஹஜ் அமீர் நேரில் விஜயம செய்து பார்வையிட்டு, நிவாரண உதவிகளையும் வழங்கினார்.

இந்த வருகையின் போது அல்-ஹஜ் அமீர் 'உதயன்' செய்தியாளரிடம் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் "வடக்கு, கிழக்கு மாகாணங்களில முஸலிம் மக்களும், தமிழ்மக்களும் பரம்பரை, பரம்பரையாக ஒன்றுபட்டு சகோதர வாஞ்சையுடனேயே வாழ்ந்துவருகின்றனர்.

"எனினும் இடையிடையே ஏற்படுடுவரும சில கசப்பான சமபவங்கள் இந்த இரு இனமக்களிடையேயும் கசப்புணர்வுகளை வளர்த்து வருகின்றன இந் நிலை இனி ஒருபோதும தொடரக் கூடாது

"முஸ்லிம் மக்களும், தமிழ்மக்களும் தமக்கிடைய சில புல்லுருவிகளால் தோற்றுவிக்கப்படும் கசப்புணர்வுகளை மறந்து ஒற்றுமையுடன் வாழ முன்வரவேண்டும்.

"பகைமையையும், பிரிவுகளையும் வளர்த்துக் கொள்வதால் நாம் எவ்வித நன்மையையும் அடைய முடியாது என்றார்.

'பகைமையையும், பிரிவுகளையும் வளர்த்துக் கொள்வதால் நாம் எவ்வித நன்மையையும் அடைய முடியாது என்றார்.

அண்மையில் இந்தியா சென்று தமிழ்க் குழுக்களைச் சந்தித்த முஸ்லிம் தூதுக் குழுவின் முக்கியஸ்த்தர்களுள் ஒருவரான அல் - ஹஜ் அமீர் அது சம்பந்தமாக கருத்து வெளியிடுகையில்: தமது குழுவின் விஜயம் வெற்றிகரமாக அமைந்ததெனவும், முஸ்லிம்களின் எதிர்கால, நிகழ்கால அமைதிக்கும், சிறப்பிற்கும ஏற்றவகையிலேயேதமது உடன்பாடுகள் அமைந்திருப்பதாகவும் தெரிவித்தார். (இ-14)

## தீர்வு காண்பதற்கு..--

(1ஆம்பக்கத் தொடர்ச்சி)

ஒப்பந்தத்தின் 215 ஆம பந்தியின படி ஏற்கனவே தீர்க்கப்படாத விஷயங்களை இரு அரசாங்கங்களும் பேசித்தீர்க்கவேண்டும. அவை பேசித் தீர்க்கப்படாத நிலையில்லயே அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்ட மூல, மாகாண சபைகள் சட்ட மூலம், நடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் அண்மைக்கால அறிக்கையொன்றிலிருந்து நாம் அறியக்கூடியதாகவுள்ளது

அத்தோடு பேசித்தீர்க்கப்பட்ட விஷயங்கள பல, எமக்கு பாதகமான முறையில் - அரசியலமைப்புத் திருத்தத்தில ஒப்பந்தத்திற்கு மாறாக மாற்றப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபடி அரசமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்டிருந்தால் அது திருத்தப்பட்ட அரசமைப்புக்கு [மாகாண சபைகளின் அதிகாரங்களை கட்டுப்படுத்துவது உட்பட எந்தவொரு புதிய திருத்தமும் மக்களின் கருத்துக்கணிப்பின் மூலம பெறப்படும அதிகாரமின்றி செய்யப்படமுடியாது என்ற நிலை வந்திருக்கும்.

இவ்விதமாக ஒப்பந்தத்தை மீறும் திருத்த சட்ட மூலங்களை இலங்கை அரசு நடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இந்திய அரசு ஏன் அனுமதித்தது என்று கேட்க விரும்புகின்றோம்.

இவ்விதம அனுமதித்த பின் ஒப்பந்த அமுலின் நிறைவேற்றத்துக்கு எவ்வாறு உத்தரவாதம் அளிக்க முடியும்?

### நம்பத் தயாரில்லை

மாகாண சபை தேர்தல்கள் முடிந்த பின் கூடிய அதிகாரங்கள். பகிர்ந்து அளிக்கப்படும் என இலங்கை அரசு கூறும் வாக்குறுதியை நாம் ஏற்க வேண்டுமென மீண்டும் கேட்கப்பட்டுள்ளோம்.

மாகாண சபை அமைப் [illegible] போதாததாக [illegible]

ஒப்பந்தத்தையே பல வழிகளில் மீறிவரும் ஒரு அரசின் வக்குறுதியை ஏற்பதற்கு தமிழ் மக்கள் தயாராக இல்லை

கடந்த காலங்களில் [illegible]

இந்திய அரசாங்கம் ஒப்பந்தத்தின் உத்தரவாதி என்ற நிலைப்பாட்டிலிருக்கின்றது. எமது தாயகம் கூறையாடப்படுவதை தடுத்து ஒரு பிரதேச தமிழ அரசு ஏற்பாடு செய்யாத நிலையில் ஈழத் தமிழ் மக்கள் தற்போதைய மாகாண சபை அமைப்பை ஏற்று தேர்தலில் பங்கு கொள்வர் என்ற பேச்சுக்கு இடமில்லை,

### சகிப்பது ஏன்?

கடைசியாக ஒன்றைக் [illegible] பிரமுகர் இத் [illegible]

திய நாடாளுமன்றத்தில் ஒப்பந்தத்தை சமர்ப்பித்து அதன் மூலம் ஈழத் தமிழ் மக்களுக்கு எல்லா உரிமைகள் கிடைக்கும் என்று உறுதி அளித்தார், அவற்றை உறுதி செய்ய இந்திய அரசு நடவடிக்கை எடுக்குமென நம்பிக்கையில் [illegible] கடந்த [illegible] 10 [illegible]

[illegible] மீறலையும் [illegible] இந்த [illegible] இனி யேல் வீண் என்று தமிழ் மக்களுக்கு [illegible] அவர்கள் சிக்காரரின் காலில விழுவதிலும் பார்க்க சண்டைக்காரனின் காலில விழுவது மேல் என்ற நிலைக்கு மாறக்கூடும் அப்போது ஈழத் தமிழ் மக்களும் இந்திய அரசும் "தவறு செய்தீர்கள் [illegible] உங்கள் படைகளை மீளப் பெறுங்கள்" என்று கூறவேண்டி வரும் [illegible] என்று நாம் பயப்படுகிறோம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது [உ.


## இன்று குதூகல ஆரம்பம்

C. I. M. A. [Stages I & II]　A. A. T. [Prelim, & Inter]

★ WEEKEND CLASSES ★

விரிவுரையாளர் குழு:

V. கருணாநிதி, S. P. சிவஞானம்,

S. சிவபாலன், S. பிலிப்,

Mrs. S. மூர்த்தி மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்.

இது விளம்பரமல்ல!

அப்படியாயின் விளம்பரம் யாது???

எமது மாணவர்களின் கடந்த காலப் பரீட்சைப் பெறுபேறுகள் மாத்திரமே.

GOOD WINE NEEDS NO BUSH

RAPID RESULTS INSTITUTE

212, கச்சேரி - நல்லூர் வீதி,

யாழ்ப்பாணம்.

[4380]


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் ருஷாந்

ஊர்காவற்றுறை. நாரந்தனை மத்தியைச் சேர்ந்த வில்வராஜா, பிறேமளா தம்பதிகளின் தவப்புதல்வன் "ருஷாந்" தனது முதலாவது பிறந்தநாளை இன்று (8. 6. 88) தன் இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, தாத்தா, பெரியத்தை, சித்தப்பா, சித்தி (பாறின்) குகன் மாமா (சுவிஸ்) தயா மாமி, மச்சான்மார், லவன் மாமா, நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த ஆனந்த் பெரியப்பா, பெரியம்மா, அக்காமார் மற்றும் உற்றார், உறவினர் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர். (4382)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வி ரஜதா

பலாலி தெற்கு சென். ஜோர்ஸ் வீதியைச் சேர்ந்த தம்பு வீர்ச்செல்வா - மரியராணி தம்பதிகளின் செல்வப்புதல்வி ரஜீதா தனது முதலாவது பிறந்ததினத்தை (08-06-88) இன்று தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை பெற்றோர், பப்பா, பேர்மார், சித்தப்பாமார், அத்தைமார், மாமமார், சித்திமார் சின்னப்பப்பா குடும்பத்தினர் அன்ரியப்ப குடும்பத்தினர் பெண்மார்க் சித்தப்பா, [illegible] ரர் பப்பா குடும்பத்தினர் சிவ பப்பா குடும்பத்தினர், கோப்பாயைச் சேர்ந்த ஆ[illegible] சின்னப்பப்பா, குடும்பத்தினர், யாழ்ப்பாணம் பவள [illegible] குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர் நலமுடன் பலலாண்டு காலம வாழ்கவென வாழ்த்துகின்றனர். (3734)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வி ரஜினி பாலசிங்கம்**
(கண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி)

மலர்வு: 27-5-1969
உதிர்வு: 31-5-1986

மகளே நீ மறைந்து இரண்டு
ஆண்டுகள் சென்றாலும் - நீ
காலனடியில் சென்று இரண்டு
நிமிடங்கள் போல் - உன்னை
எம்மால் மறக்க முடியாமல்
தவியாய் தவிக்கின்றோம் - மகளே

பள்ளிப் பருவம் முடிந்து
பல்கலைக் கழகத்தில காலடி வைக்க
எண்ணி இருந்த - உந்து
நினைவுகளை பறித்து இறைவன்
விரைவல் தன்னிடம் அழைத்ததும் - ஏனோ

எமது குடும்பத்து விளக்காய்
சுடர் விட வேண்டிய - மகளே
பலமாக வீசிய காற்றில்
அணைந்த விளக்குப போல் - நீர்
எம்மை விட்டுச் சென்றதனால்
எமது வீட்டில் ஒளி - இன்றி
நாம் இருட்டில் தவிக்கின்றோம்

அம்மா ரஜினி கடல் அலைகள்
அடித்து ஓய்ந்து விட்டாலும்
மகளே உனது நினைவலைகள் - எம்மை
விட்டு ஓயவில்லையம்மா - மகளே

உமது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:
அப்பா அம்மா, தம்பி ரஞ்சித்,
உறவினர்கள் நண்பர்கள் நண்பிகள்

திரு தி. பாலசிங்கம்.
[ ஜினி சிறீம ஹவுஸ்]

32 பரிபாலக லேன்,
சசரி யாழ்ப்பாணம்
8-6-1988
(சி-5381)

யாழ்ப்பாணத்தில்

# கல்விக் கல்லூரி நிறுவ நடவடிக்கை எடுக்குக

## பேராசிரியர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ்ப்பாணத்தில் கல்விக்கல்லூரி ஒன்றை நிறுவ கல்வி அமைச்சு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்

இக் கோரிக்கையை பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை விடுத்தார்.

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் அண்மையில் நடந்த யாழ்ப்பாணம் கல்வி முன்னேற்றக் சழகத்தின் கூட்டத்தில் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை பேசினார்.

அப்போது அவர் சொன்னதாவது:

இலங்கையில்இதுவரை ஏழு சிங்களமொழி மூலக் கல்விக் கல்லூரிகள நிறுவப்பட்டுள்ளன.

கொட்டகலை ஸ்ரீபாத கல்விக்கல்லூரியில சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் மூலம் பயிற்சி அளிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

ஆனால்வடக்கு கிழக்கு பகுதிகளின் கல்விக் கல்லூரிகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படாதது கவலை தருகின்றது.

ஆசிரிய கல்வியை மேற்கொள்ளக் கூடிய தகைமைபெற்ற ஆயிரக் கணக்கான தமிழ்மொழி மூல மாணவருககுச் சந்தர்ப்பபளிக்கும் வகையில் யாழ்ப்பாணத்தில் தாமதமின்றிக் கல்விக் கல்லூரி ஒன்றை நிறுவ அரசு முன்வரவேண்டும் — இப்படி பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை சொன்னார்.

விரிவுரையாளர் திரு எல். நல்லையா பேசியதாவது;

பலாலி ஆசிரிய பயிற்சிக்கல்லூரி பாரம்பரிய ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் முதன்மையானது.

வயாவிளானில் இக் கல்லூரிக்கு இருந்த கட்டடங்கள் அனைத்தும் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் வந்ததன் பின்னர் கோப்பாய் மகா வித்தியாலயத்தின் ஒரு பகுதியில் இன்று இக் கல்லூரி இயங்கி வருகின்றது.

200 ஆசிரியர் வரையே இன்று பயிற்சிபெற்று வருகின்றனர். மீண்டும் வயாவிளானுக்கு இக் கல்லூரி போகும் சாத்தியம் இல்லை எனவே பலாலிக் கல்லூரியை யாழ்ப்பாணத்தில் பொருத்தமான இடத்தில் நிலைகொள்ளச் செய்ய கல்வியமைச்சை நிர்ப்பந்திக்க வேண்டும்-

இப்படி திரு. நல்லையா சொன்னார்.

கூட்டத்திற்கு முன்னாள் கல்விப் பணிப்பாளர் திரு எஸ் பி சிவபாதம் தலைமை வகித்தார்.

[இ-எ]

## பகுதி நேர முழு நேர வகுப்புகள்

யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதிநேர— முழுநேர வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதி நேரவகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களிலும் முழுநேர வகுப்புக்கள்சனி ஞாயிறு தவிர்ந்த மற்றையதினங்களிலும் நடைபெறுகின்றன (இ-11)

## புதிய கட்டடத்துக்கு அடிக்கல்

வேலணை கிழக்கு தேவி கோட்டம் சன சமூக நிலையத்தின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் வேலணை கிழக்கு மகாவித்தியாலய அதிபர் திரு சோ. வடிவேல் தலைமையில் நடைபெற்றது. (இ-167)

# தமிழ்மக்கள் வாழ்க்கையிலிருந்து இசைக்கலையைப் பிரிக்க முடியாது

வட்டுக்கோட்டை, ஜூன் 7

இசையானது தமிழர் கலாசாரத்தோடு இணைந்துள்ளது தமிழ் மக்களது இன்ப துன்பங்களிலும் இது கலந்துள்ளது. தமிழ்மக்களதுவாழ்க்கையோடு கலந்துள்ள இந்த இசைக்கலையை என்றுமே பிரிக்க முடியாது. இத்தகைய சிறப்பு வாய்ந்த இசைக்கலையோடு மேற்கத்திய இசை சேர்ந்து அதனைச் சீரழித்து வருகின்றது. எமது கலையோடு ஏனைய கலைகள் சேர்ந்து அதனைச் சீரழிய வைக்குமானால் அதை நாம் ஒருபோதும் ஏற்க முடியாது.

வட்டுக்கோட்டைகலாநிலைய வெள்ளிவிழா மூன்றாவது கலைஅரங்கும் கலாநிலையநிறுவுநரும் முதல்வருமான. திரு. க.கைலாயநாதன் அவர்களது பாராட்டு வைபவமும் வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் நடைபெறறது

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பாராட்டுரை வழங்கிய யாழ் கல்வித் திணைக்களப் பிரதம கல்வி அதிகாரி திரு கு சோமசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

கலாநிலைய மாணவி திருவாட்டி சங்கீதரத்தினம் சிதம்பரேஸ்வரி தர்மலிங்கம் தலைமையில் விழா நடைபெற்றது.

வடமாநில சங்கீதக் கல்வி அதிகாரி திரு. சு. கணபதிப்பிள்ளை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் ஆகியோரும் வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாலய அதிபர் திரு. சிவவாகீசர், வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தைச் சேர்ந்த செல்வன் ஜெயமயூரன் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்.

யாழ் கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு கு. சோமசுந்தரம் வட்டுக்கோட்டை கலாநிலைய நிறுவுநரும் முதல்வருமான திரு க. கைலாயநாதருக்குப் பொன்னாடை போர்த்தி அன்பளிப்பு வழங்கிக் கௌரவித்தார்.

வெள்ளிவிழா தொடர்பாக நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு அவர் சான்றிதழ்களையும் வழங்கினார்.

வட்டுக்கோட்டைகலாநிலைய மாணவிகள் கயிலாயநாதருக்குக் காசுமாலை அணிந்து பாராட்டுப்பத்திரம் வழங்கிக் கௌரவித்தனர்.

கலாநிலைய மாணவிகள் குமாரிகள் இசைமணி செல்வி ச. யசோதா, அ. சந்தானலட்சுமி ஆகியோர் வயலின் இசை நிகழ்த்தினர். (இ-116)

## ஜய்ப்பூர் தொழிற்சாலை நடத்தும் விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம். ஜூன் 8

ஜெய்பூர் செயற்கைக் கால் பொருத்தும் தொழிற்சாலையால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விளையாட்டுப் போட்டி ஜூலை மாதம் நடைபெறும்.

இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் எதிர் வரும் 14 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பப்பட வேண்டும்.

சைக்கிள் ஓட்டப் போட்டி சிறுதூர, ஓட்டப் போட்டி மற்றும் சிறுவர்களுக்கான நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

மேலதிக விபரங்களை யாழ் அன்னையர் முன்னணியிடம் அல்லது ஜெய் பூர் செயற்கைக் கால் பொருத்தும் தொழிற்சாலையில் பெற்றுக்கொள்ள முடியும்.

(இ-5)

## விசேஷ ஆணையாளர்

மானிப்பாய், ஜூன் 5

உள்ளூராட்சி நிர்வாக சேவை உத்தியோகத்தரான திரு. பொன்னம்பலம் பாலசிங்கம் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் விசேட ஆணையாளராகவும் நியமனம் பெற்றுள்ளார்.

(இ-90)


## அற்புத இரவு

பாவம் சாபம், பிசாசு, வியாதி, எல்லாவற்றிலிருந்தும் இயேசு விடுதலை அளிக்கிறார்.

இன்று மாலை 5.00 மணிக்கு நடைபெறும் கூட்டத்துக்கு உங்களை அழைக்கின்றோம். -இலவசம்-

அஸெம்பிலி ஒப் கோட்
14, இராசாவின் தோட்டம்
யாழ்நகர்.
[4378]


## 4வது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 23 - 01 - 1957
மறைவு 08 - 06 - 1984


செல்வன் சுப்பிரமணியம் ஸ்காந்தரூபன்

அன்புடன் நினைவு கூர்பவர்கள்
அப்பா, அம்மா, அக்கா, அத்தான், தம்பி ரவி, தம்பி சத்தி,
மருமகன்கள்: விதுரணன், விதுகரன்.

கா. ஜெயசந்திரன்,
இலங்கை வங்கி,
யாழ்ப்பாணம்.

உய்யக்சட்டுவை,
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.
(4105)

## 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலியும் நன்றி நவிலலும்



**கனகரெட்ணம் ஜெகதீஸ்வரன்**
மண்ணுலகம் தோற்றம் 27-11 1970
விண்ணுலகம் மறைவு: 09-05-1988

முந்தி தவம் இருந்து முன்னூறு
நாள் சுமந்து
அல்லும் பகலும் ஆதரித்த
பெற்றோரை மறந்த—
பாசமுடன் ஒன்றிணைந்த
சகோதரர்களைப் பிரிந்து
ஊரும் உறவும் போற்றும் உற்றாரை விட்டு
ஆசையுடன் அன்பு வைத்த
அயலாரைத் துறந்து
இன்பமுடன் இனித்து விளையாடிய
தோழர்களை மறந்து
வாழ்வது மாயம் என்னும்
தத்துவத்தை உணர்ந்து
மண்ணுலகம் விட்டு விண்ணுலகம் விரைந்த
எம் செல்வன் ஜெகனது ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திப்போமாக

உமது பிரிவால் துயருறும்,
அப்பா, அம்மா, ஸ்ரீ. சசி. விஜித்தா,
பாலேந்திரன், உற்றார், உறவினர்,
நண்பர்கள் நண்பிகள்.

அன்னாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் அளித்தும், உதவிகள் செய்த சகலருககும், யா / பரியோவான் கல்லூரி அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும், ய /திருக்குடும்ப கன்னியர் மடம் (தமிழ்) A/L வகுப்பு ஆசிரியர்கள், மாணவிகளுக்கும், யா/சம்பத்தரிசியார் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் றேடியன்ற் கல்வி நிலைய ஆசிரியர்கள், மாணவர்களுக்கும், அரச மரக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நேரில் நவில முடியாமைக்கு வருந்துகின்றோம்.

இங்ஙனம்
திரு. திருமதி கனகரட்ணம்
441, கண்டி வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.
[4113]


# டுபாய்

## அரசாங்க கட்டிட வேலைத்திட்டம்

✶ எம்மிடம் விண்ணப்பித்தவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

கொழும்பில் நேர்முகப் பரீட்சை பின்வரும் திகதிகளில் நடைபெறும்

6 - 6 - 88, 7 - 6 - 88, 8 - 6 - 88

பின்வரும் வேலைகளுக்கு மாத்திரம் வெற்றிடங்கள் தற்சமயம் உள்ளன

| | | | |
|---|---|---|---|
| 1. | எலெக்ற்றிக்கல் என்ஜினியர் | 2 | 900 US$ |
| 2 | மேசன் | 5 | 250 ,, |
| 3. | தச்சுவேலையாளன் | 5 | 250 ,, |
| 4 | கம்பி வளைப்போர் | 5 | 250 ,, |
| 5 | பிளம்பர் | 5 | 250 ,, |
| 6 | A/C டெக்னீசியன் | 5 | 275 ,, |
| 7. | பெயின்டர் — ஸ்பிறே | 5 | 275 ,, |
| 8. | எலெக்றீசியன் | 5 | 250 ,, |
| 9 | வெல்டர் | 5 | 250 ,, |

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

K. லிங்கம்
காளுவன் சந்தி,
சுழிபுரம்.

A. தவச்செல்வம்
நெல் லியான் வீதி,
சுழிபுரம்.

[C 5370]



தேநீர் பிரியர்களுக்கோர் சுவையான செய்தி!!
இலங்கையிலே முதன் முறையாக
வடமாகாணத் தண்ணீர்க்கேற்ற வகையில்
தயாரிக்கப்பட்ட மிகச் சிறந்த தேயிலை!!

# "தங்கம் தேயிலை"
# "TANGAMM TEA"

நிறைந்த சுவை! அதிக கூடிய சாயம்!!
100 gr. 50 gr 25 gr, பக்கெட்டுகளில் எங்கும்
★ பரபரப்புடன் விற்பனையாகின்றது ★
100gr.- 7/25 50gr.- 4/- 25gr.- 2/25

தேநீர் தயாரிக்கும் முறை:-

ஒரு தேக்கரண்டி 'தங்கம் தேயிலையை' நன்றாகக் கொதித்த ஒரு கோப்பை தண்ணீரில் கலந்து இரண்டு நிமிடத்திற்கு மூடி வைக்கவும். நன்றாகக் கலக்கிய பின் மீண்டும் இரண்டு நிமிடத்திற்கு மூடி வைக்கவும். தேயிலையை வடித்த பின் பாலும், சீனியும் அளவுடன் சேர்த்துப் பரிமாறவும்

ஏகவிநியோகஸ்தர்:- மெடிக்கல் ஹோல்
224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தயாரிப்பாளர்:-
Ceylon Commodity Marketing[Pvt.] Ltd.
P. O. Box - 640, Colombo.

குறிப்பு: 1. தங்கம் LOOSE தேயிலை 20 Kg. பெட்டிகளிலும் விற்பனைக்குண்டு
2. வெகுவிரைவில் மாபெரும் பரிசுப் போட்டியை எதிர்பார்த்து வெற்றுப் பக்கெட்டுக்களைச் சேகரியுங்கள்.

[C/5184]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

**பொருள்:**
செயல் முடிக்கும் வகையும், வரக்கூடிய இடையூறும், முடிந்தபோது கிடைக்கும் பெரும்பயனும் ஆகியவற்றை ஆராய்ந்து செய்யவேண்டும்.


# உதயன்

உண்மை - இதுகாமை - நடுநிலைமை

இல:-398/தோணவர் வீதி, தொலைபேசி 24605
யாழ்ப்பாணம். 23073
08-06-1988 உ.பொ. நெவளி


## விடாப்பிடித் தேர்தல்!

இனப்பிரச்சினையை — தமிழர் பிரச்சினையை — தீர்ப்பதற்காக அதிகாரப் பரவலாக்கம் செய்வதற்காகவே மாகாணசபை முறை கொண்டுவரப்படுவதாகக் கூறப்பட்டது. ஆனால் அதில் இருக்கும் குறைபாடுகள் காரணமாகத் தமிழர்கள் அதனை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் விதத்தில் மாகாண சபைகளின் அதிகாரங்களை அதிகரிக்க ஜே. ஆர். அரசு தயாராக இல்லை. இத்தகைய சூழ் நிலையில தமிழ்ப் பகுதிகளில் தேர்தல் நடக்கும் சாத்தியமும் தென்படவில்லை.

ஆனால், ஆட்சி அதிகாரத்தைப் பரவல் செய்து, மாகாண மக்களுக்கு ஆட்சி உரிமை தரப்படவேண்டும் என்று கேட்காமலே, சிங்கள மக்களுக்கு மாகாண சபைகள் கிடைத்திருக்கின்றன. உரிமைப் போராட்டம் என்று எதுவுமே இல்லாமலே அவர்களுக்குச் சும்மா வந்து விழுந்திருக்கிறது மாகாண மட்ட ஆட்சி அதிகாரம்!

மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜே. வி. பி வன்செயல்களை செய்த போதிலும், ஆறு மாகாண சபைகளுக்குத் தேர்தல்கள் நடந்து முடிந்து விட்டன.

பெரும் இராணுவப் பாதுகாப்புகளைப் போட்டு, அதாவது இராணுவ பலத்தின் உதவியோடு அந்த மக்கள் கருத்து — தீர்ப்பு — அறியப்பட்டிருக்கிறது.

குறிப்பாகக் கடந்த வாரம் நடந்த மேற்கு, மத்திய மாகாண சபைத் தேர்தல்கள் பெரும் படைப் பாதுகாப்புடன் நடந்திருக்கின்றன.

57 சதவீதமானவர்கள் வாக்களித்திருப்பதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு பீட்டர் கெனமனின் வாக்கு, அவர் வாக்களிப்பு நிலையத்துக்குப் போவதற்கு முன்னரே பயன்படுத்தப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதே போல, பயத்தின் மத்தியில் வாக்களிப்பு நிலையத்துக்குச் செல்லாத ஆயிரக்கணக்கானோரின் வாக்குகளும் என்ன நடந்திருக்கும் என்பதை வெருமே சந்தேகத்துடன் நோக்குவது தவிர்க்க முடியாதது.

வாக்குச் சாவடி ஒன்றிலிருந்து வாக்குப் பத்தகங்கள் எடுத்துச் செல்லப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையாளரே முறைப்பாடு செய்திருக்கிறார்.

அப்படியாயின் நடந்து முடிந்த தேர்தல்களில் கிடைத்த தீர்ப்பு உண்மையான மக்கள் தீர்ப்புத்தானா அல்லது உருவாக்கப்பட்ட தீர்ப்புத் தானா என்பது கேள்விக் குறி. அதுவும் ஐ.தே.கட்சி பெரு வெற்றியும் அடைந்திருக்கிறது என்றால் சந்தேகம் மேலும் வலுக்கிறது அல்லவா?

வடக்குக் கிழக்கில் மாகாணசபைத் தேர்தல் நடக்கவில்லை என்றாலும், ஏனைய பகுதிகளில் அதனை நடத்திக் காட்டுவேன் என்ற வீம்புடன் அரசு செயற்பட்டிருக்கிறது.

அங்கும் மக்கள் தமது வாக்குரிமையை சுதந்திரமாக, அச்சமின்றிச் செலுத்தக்கூடிய நிலை இருக்கவில்லை. சுதந்திரமான தேர்தல் நடக்கவில்லை.

இவற்றைவிட மேலும் வேடிக்கையானது என்னவென்றால் தென்மாகாண சபைத் தேர்தலுக்காக 12,000 துருப்புகள் அங்கு அனுப்பப்பட்டிருப்பதுதான். இராணுவ மயப்படுத்தப்பட்ட சூழலில நாளை தேர்தல் நடக்கப் போகிறது. மக்கள் அமைதியாகச் சென்று தமது வாக்குரிமையைப் பயன்படுத்தும் நிலை அங்கு இருக்குமா? இராணுவமும், ஜே. வி. பியும் எப்போது மோதிக் கொள்ளும் என்ற நிலை இருக்கும்போது அமைதியான தேர்தலை எப்படி எதிர்பார்ப்பது?

தாம் நினைத்ததைச் செய்ய வேண்டும் என்பதில் ஜனாதிபதி ஜெயவர்த்தனா விடாப்பிடியாக நிற்கிறார் என்பதையே குழப்பத்தின் மத்தியில் தேர்தல், அச்சத்தின் மத்தியில் தேர்தல் என்ற நிலை எடுத்துக் காட்டுகிறது.

தமிழர் அபிலாஷைகளை நிறைவேற்றுவதில்லை; அவர்கள் கேட்பதைக் கொடுப்பதில்லை; உரிமைகளை வழங்குவதில்லை என்ற விடாப்பிடியும் அப்படியே.

### தொடர் மதிப்பீடு

மானிப்பாய், ஜூன் 8

1986 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இவ்வாண்டு நடத்தப்படவிருக்கும் புதிய ஜீ.சி.ஈ. [சா/த] பரீட்சை சம்பந்தமான தொடர் மதிப்பீடு 10 ஆம் 11ஆம் ஆண்டுகளில் சிறந்த முறையில் செயல்படுத்தப்படவுள்ளது.

இதற்கு வசதியாக அறிவுறுத்தல்களும் மாதிரிச் சோதனைகளும் அடங்கிய பல நூல்களை கல்வி அமைச்சு பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்துள்ளது. (சி-90)

# பிஜி இந்தியப் போராளிகள்
# ஆயுதக் கிளர்ச்சி நடத்த முயற்சி

### முன்னாள் அமைச்சர் உட்பட 40 பேர் கைது

சுவா, ஜூன் 7

பிஜி தீவில் மூன்று பட்டினங்களில் பொலீஸார் பெரும் தொகையான ஆயுதங்களைக் கைப்பற்றினர் என்று அறிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாகப் பதவி கவிழ்க்கப்பட்ட பவித்ரா அரசில் வெளியுறவு அமைச்சராகப் பணியாற்றிய திரு. கிருஷ்ணதாஸ் உட்பட 40 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஆயுதக் கிளர்ச்சி ஒன்றைத் தற்போதைய அரசுக்கு எதிராக நடத்துவதற்காகவே இந்த ஆயுதங்களை இந்திய வம்சாவளிப் போராளிகள் சேகரித்து வந்தனர் என்று கூறப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் எடை 5 டன். அவற்றில் சோவியத் தயாரிப்பான 72 ஏவுகணைகள், 300 கிரனேட்டுகள் வெடிமருந்துகள் நிறைந்த மூன்று டிரம்கள் அடங்கியிருந்தன என்று அறிவிக்கப்படுகிறது.

பிஜி மக்களில் அரைப் பங்குக்கு மேல் இந்திய வம்சாவளியினர். இவர்களின் ஆதரவைப் பெற்ற அரசு சென்ற ஆண்டு ஏப்ரலில் பதவிக்கு வந்தது. பிஜி பழங்குடியினர் தரப்பில் நடத்தப்பட்ட இராணுவச் சதியில் இந்த அரசு கவிழ்க்கப்பட்டது தெரிந்ததே.

ஏற்கனவே பிஜியில் உள்ள இந்திய வம்சாவளிப் போராளிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்படும் ஆயுதங்களை ஆஸ்திரேலிய சுங்கத் திணைக்களம் கைப்பற்றியிருந்தது.

சிட்னி துறைமுகத்தில் தரித்து நின்ற கப்பல் ஒன்றைச் சோதனையிட்ட போதே இந்த ஆயுதக் கடத்தல் சம்பவம் வெளியானது.

சோவியத் தயாரிப்பான தன்னியங்கி ரைபிள்கள், பீரங்கி குண்டுகள் உட்பட பல நவீன ஆயுதங்கள் அக் கப்பலில் இருந்தன என்று அறிவிக்கப்படுகின்றது.

பிஜியின் தற்போதைய ஆட்சியைக் கவிழ்க்க இராணுவ நடவடிக்கை எடுப்பதற்காக பிஜியில் உள்ள இந்திய வம்சாவளிப் போராளிகளுக்கு இந்த ஆயுதங்கள் கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்று கூறப்பட்டது.

பதவி கவிழ்க்கப்பட்ட பிரதமர் டாக்டர் பவித்திரா கருத்து வெளியிடுகையில், 'இந்த ஆயுதக் கடத்தல் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது'' என்று தெரிவித்தார். (எ)

## அங்கோலா பேச்சுக்கள் தோல்வியை நோக்கி...
## கேப்டவுன் குற்றச்சாட்டு

கேப்டவுன், ஜூன் 7

நமீபியாவின் எல்லைப் புறத்தில் கியூபா தனது படைகளையும் போர்க் கருவிகளையும் குவித்து வருவதாக தென் ஆபிரிக்க அரசு குற்றஞ் சாட்டியுள்ளது.

இதனால் அங்கோலா உள்நாட்டு யுத்தம், நமீபிய சுதந்திரம் சம்பந்தமாக கடந்த மாதம் ஆரம்பமான பேச்சுக்களில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

நமீபியாவின் எல்லைப் புறத்தில் உள்ள கியூபாக் கிராமங்களில் கியூபா படையினர் பெரும் எண்ணிக்கையில் குவிக்கப்பட்டுள்ளனர்.

போர்க் கருவிகள் புதிதாக கொண்டு வரப்பட்டுள்ளன.

சமாதானப் பேச்சுக்களில் கியூபாவுக்கு நாட்டமில்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது.

இப்படி தென் ஆபிரிக்க அரசு குற்றஞ் சாட்டியுள்ளது. (எ)

# மாஸ்கோ ரயில் குண்டு வெடிப்புச் சம்பவத்தில்
## 68 பேர் பலி!

மாஸ்கோ, ஜூன் 7

மாஸ்கோவில் கடந்த சனிக்கிழமை ரயில் ஒன்றில் ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் 68 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்த ரயிலில் 120 மெட்ரிக் தொன் வெடி மருந்துகள் ஏற்றிச் செல்லப்பட்டது.

மாஸ்கோவில் இருந்து 200 மீட்டர் தொலைவில் உள்ள கோர்கி ரயில் நிலையத்தில் ரயில் தரித்து நின்ற போது தான் இச் சம்பவம் இடம்பெற்றது.

மூன்று ரயில் பெட்டிகள் தூக்கி எறியப்பட்டன. அருகில் இருந்த சுமார் 300 வீடுகள் சேதமடைந்தன. நூறு பேருக்கு மேல் காயமடைந்தனர்.

நிலத்தில் பெரிய ஆழமான கிடங்கு இதனால் ஏற்பட்டது.

இச் சம்பவம் பற்றி விசாரணை ஒன்றை நடத்த உதவிப் பிரதமர் தலைமையில் உயர் மட்டக் குழு ஒன்றை சோவியத் அரசு நியமித்திருக்கிறது. (எ)

# தென் ஆபிரிக்காவில் கறுப்பு இனத்தவர் வேலை நிறுத்தம்!

கேப்டவுன், ஜூன்.7

கறுப்பு இனத் தொழிலாளர்கள் தென் ஆபிரிக்காவில் நேற்று பெரிய வேலை நிறுத்தம் ஒன்றை ஆரம்பித்தனர்.

சுமார் 30 லட்சம் தொழிலாளர் இவ்வேலை நிறுத்தத்தில் குதித்தனர் என்று பி பி சி தெரிவித்தது.

90 சதவீதமானோர் ரயில், பஸ் தொழிலாளர்கள் என்று அறிவிக்கப்படுகின்றது.

நிறவேற்றுமையை வலியுறுத்தும் உத்தேச தொழிற் சங்கச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாகவே இவ்வேலை நிறுத்தம் என்று தொழிற் சங்கத் தலைவர்கள் தெரிவித்தனர். (எ)

## வெளி உலகில்

# வியட்நாமில் உணவுப் பஞ்சம்

ரோம், ஜூன் 7

வியட்நாமில் உணவுப் பற்றாக்குறை காரணமாக 70 சதவீதமான மக்கள் கஷ்டப்படுவதாக உலக உணவு ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

ரோமை தலைமையலுவலகமாகக் கொண்டு இயங்கும் உலக உணவு ஸ்தாபனம், ஐ.நா.வின் ஒரு அங்கமாகும்.

ஸ்தாபனம் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்ட தகவலை வெளியிட்டிருக்கிறது.

வியட்நாம் மக்களின் கஷ்டத்தைப் போக்க 65 ஆயிரம் மெட்ரிக் தொன் தானியம் உடனடியாக அனுப்பிவைக்க வேண்டும் என்றும் உலக உணவு ஸ்தாபனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த உணவுப் பற்றாக்குறை, 14 வயதுக்குட்பட்டவர்களைத் தான் கடுமையாகப் பாதித்துள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

தானிய விளைச்சல் வீழ்ச்சி கண்டதே இந்தப் பற்றாக் குறைக்குக் காரணம் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

### குண்டு வெடித்து 4 பேர் பலி

கேப்டவுன், ஜூன் 7

ஜோகன்னஸ்பர்கில் நேற்று நடந்த கிரனேட் தாக்குதலில் 4 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

கறுப்பு இனத் தொழிலாளர்கள் பொது வேலை நிறுத்தம் ஒன்றில் ஈடுபட்டிருக்கின்றனர் அல்லவா! அதைத் தொடர்ந்து பரவலாக இடம்பெற்ற வன்செயல்களில் இக்குண்டுத்தாக்குதலும் ஒன்று. (எ)

### பிறந்தநாள் செய்தி

என்றும் எந்த நிலையிலும் தமிழமொழிக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் என்னுடைய தொண்டு தொடரும்.

இதுவே என்னுடைய பிறந்த நாள் செய்தி.

தி.மு.க தலைவர் கருணாநிதி தனது பிறந்த நாள் செய்தியில இப்படித் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை 3 ஆம் திகதி திரு கருணாநிதியின் பிறந்தநாள் என்பது குறிப்பிடத்தக்கது.

### ராஜீவ் பொன் விஜயம்

பொன், ஜூன் 7

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மேற்கு ஜேர்மன் பயணம் ஒன்றை மேற்கொண்டிருக்கிறார்.

சிரிய விஜயத்தை முடித்துக் கொண்டு, பிரதமர் காந்தி மேற்கு ஜேர்மனிக்குச் சென்றார். (எ)

மனித முன்னேற்ற நடுநிலையத்தால்

# மட்டுவில் பகுதியில் 22 வீடுகள் அன்பளிப்பு

## சிறுகைத்தொழில்களும் அறிமுகம்

குருநகர், ஜூன் 8

1983 ஆம் ஆண்டு ஜூலைக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட 22 தமிழ்க் குடும்பங்களுக்கு யாழ் மறைமாவட்ட மனித முன்னேற்ற நடு நிலையம் கிரிமலை சேந்தாங்குளம் அருகே மட்டுவலை என்றழைக்கப்படும் பகுதியில வீடுகளைக் கட்டிக் கொடுத்து குடியமர்த்தி உள்ளது.

ஒவ்வொன்றும் 30 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட 22 வீடுகளையும் வழங்கும் வைபவம் சமீபத்தில நடைபெற்றது.

இந்த வீடுகள் அமைந்துள்ள பகுதி 'வாழ்வகம்' என்ற பெயருடன் புதிய கிராமமாக உருவெடுத்துள்ளது.

'வாழ்வகம்' கிராமத்தில் குடியிருந்து இருக்கும் 22 குடும்பங்களது வருவாய்க்கும் சிறுகைத் தொழில்களை நடுநிலையம் அறிமுகம் செய்துள்ளது.

அவற்றை செய்வதற்கான உபகரணங்களையும் வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்து உதவியாகப் பெறறு வழங்கி இருக்கிறது.

வாழ்வகம் வீடுகளை சம்பிரதாய பூர்வமாக கையளிப் பதற்கு முன்பு மதமுறைப்படி கட்டிடத் தொகுதியின் முன்பு அமைந்துள்ள அன்னை மாபாளின் திருச்சொரூப முன்றலில் நன்றித் திருப்பலிப் பாடற் பூசை நடத்தப்பட்டது.

சேந்தாங்குளம் பங்குத் தந்தை வண. பிதா செபஸ்ரியன் அடிகளால் இது ஒப்புக் கொடுக்கப்பட்டது.

மறைமாவட்ட முதன்மைக் குரவர் வண-பிதா மைக்கல் சவுமி அடிகளார் வாழ்வகத்தை சிறப்பாக உருவாக்கத் தன்னுடன் தோளோடு தோள் நின்று உழைத்த சகோதரர்களுக்கும், வெளிநாட்டில் இருந்து உதவியவர்களுக்கும நன்றி தெரிவித்தார்.

வாழ்வகம் வாசிகள் சார்பில குடியிருப்பாளர் சங்கத் தலைவர் திரு. அன்ரனி இராயப்பு நன்றி செலுத்தினார். [இ-51]

## கூட்டுறவுப் பணியாளருக்கு ஊக்குவிப்புப் பணம்

### ரூ. 2 லட்சம வழங்கப்பட்டது

காங்கேசன்துறை ஜூன் 8

நெருக்கடியான கால கட்டத்தில் மக்களின் தேவைகளை நிறைவேற்ற சிறந்த வகையில் பணி புரிந்த கூட்டுறவுப் பணியாளர்களுக்கு தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் 2 லட்சம் ரூபாவை ஊக்குவிப்புப் படியாக வழங்கியுள்ளது.

1987 ஆம் ஆண்டில் அடிக்கடி ஏற்பட்ட நெருக்கடிகளின் போது மக்களுக்கு அத்தியாவசிய பொருள்களை வழங்கவும், நிவாரணப் பொருட்களை வழங்கவும் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க பணியாளர்கள் பெரிதும் கடமையுணர்ச்சியுடன பணியாற்றி வந்தனர்.

இதற்காகவே இந்த ஊக்குவிப்புப்படி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்கத் தலைவர் திரு எஸ். சிவமகாராசா கூட்டுறவுப் பணியாளர் நலன் புரிச் சங்கத்தின் தலைவரிடம் இத்தொகையைக் கையளித்தார். (68)

### வல்லைச்சந்தி சென்றி அகற்றப்பட்டது

வடமராட்சி ஜூன் 8

வல்லைச் சந்தியில் அமைதிப்படையினரால் மேற்கொள்ளப்பட்டு வந்த சென்றி அகற்றப்பட்டுள்ளது. [இ-160]

### முழங்காவில் கொத்தணி அதிபர்

கிளிநொச்சி ஜூன் 8

கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளரின் நிர்வாகத்தின் கீழ் புதிதாக உருவாக்கப்பட்ட முழங்காவில் கொத்தணிப் பாடசாலையின் கொத்தணி அதிபராக திரு. க. சாம சிவம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடமையாற்றிய வட்டக்கச்சி கொத்தணிப் பாடசாலைகளின் கொத்தணி அதிபராக இயக்கச்சி அ. த. க. பாடசாலையின் அதிபர் திரு. ப. அரியரத்தினமும், இயக்கச்சி அ. த. க. பாடசாலையின் அதிபராக முழங்காவில் அ. த. க. பாடசாலை அதிபர் திரு. பொ. நிலைநாதனும் நியமிக்கப்பட்டுள்ளனர். (கி-76)

### மயிலணிக் கந்தன் மகோற்சவம்

சுன்னாகம் மயிலணிக் கந்தசுவாமி கோவில வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தேர்த் திருவிழா 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 9 மணிக்கும், தீர்த்தத் திருவிழா 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கும் நடைபெறும்.

தினமும் காலை 7 மணிக்கும் மாலை 4.30 மணிக்கும் திருவிழா ஆரம்பமாகி நடைபெற ஏற்பாடாகி இருக்கிறது.

உற்சவ காலத்தில் தினமும் நற்சிந்தனை மாலை 5.30 மணிக்கு இடம்பெறும். (இ-சி)

# சொறி சிரங்குக்கு வைத்தியம் செய்வதற்கு
## சுகாதாரத் தொண்டருக்கு பயிற்சி

கோப்பாய் சுகாதார அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் சொறி, சிரங்கு என்பவற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வைத்திய வசதி அளிப்பதற்கு சுகாதாரத் தொண்டர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் குசையப்பர் கோவிலிலும் நுணாவில் பகுதியிலும் சிகிச்சை அளிக்கும் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சொறி, சிரங்கினால் பாதிக்கப்படுவோர் இங்கு வந்து சிகிச்சை பெற முடியும் என சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார். (72)

மீனவர் பிரச்சினை

# கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளை
## படையினர் சந்தித்துப்பேசினர்

காங்கேசன்துறை, ஜூன் 8

இரவு நேர மீன் பிடிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் எழுந்துள்ள கஷ்டநிலை குறித்து கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் அமைதிப்படை அதிகாரிகள் சமீபத்தில் பேச்சு வார்த்தை நடத்தினர்.

இரவு நேர மீன் பிடிக்குத் தடை விதிக்கப்பட்டதால் பலாலி, மயிலிட்டி, ஊறணி, காங்கேசன்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூவாயிரத்துக்கு அதிகமான கடற்றொழிலாளர்களும், அவர்களை அண்டிவாழும் ஐயாயிரத்துக்கு மேற்பட்டவர்களும் பெரிதும் கஷ்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக இரவு நேர மீன்பிடிக்கு அனுமதி கோரி இப்பகுதியைச் சேர்ந்த கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி சங்கங்கள் சாத்வீகப் போராட்டத்தில் குதிக்க ஏற்பாடு செய்து வந்தன.

இதையடுத்து இந்திய அமைதிப்படை அதிகாரிகள் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்துக்கு விஜயம் செய்து கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

கடற்றொழிலாளர் கஷ்ட நிலையை அறிந்து கொண்ட அமைதிப் படை அதிகாரிகள் உயர் மட்டத்தில் தொடர்பு கொண்டு பதிலளிப்பதாகத் தெரிவித்து சென்றனர். (அ 68)

### புதிய சித்திரத்தேர்

புங்குடுதீவு பாணாவிடை சிவன் தேவஸ்தானத்துக்கு சுமார் பத்து லட்சம் ரூபா செலவில் புதிய சித்திரத்தேர் உருவாகிறது.

சிற்பாசாரி ஆ. சிவரத்தினம் தலைமையிலான குழுவினர் தேர் வேலைகளை மேற்கொண்டுள்ளனர். [தீ-131]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
• தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
• நெகட்டிவ் [PROCESSING] செய்தல் இலவசம்
• சிறுபனை வர்ண நிழற்படச் சுருள்கள்
KODAK FUJI KONICA
TUDOR FORTE B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# உதயன்

08 - 06 - 1988 புதன்கிழமை


எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள்
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

Hostel Accomodation available at Jaffna Y. W. C. A For Students and Working Girls Bed Breakfast and Dinner provided apply with names of 2 referees to

9o, Chapel Street Jaffna

President, Y.W.C.A.

[C 5398]



யாழ் பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் இந்திய அமைதிப்படையினரால் அகௌரவப்படுத்தப் பட்டதை ஆட்சேபித்து நேற்று முன்தினம் பல்கலைக்கழக மாணவ மாணவிகள் கோஷங்களை எழுப்பிய வண்ணம் யாழ் நகரில் ஊர்வலமாக வந்தபோது எடுக்கப்பட்ட படங்கள்.

படங்கள்:- அகில்ராஜ்

திருமதி நா. சோமசுந்தரக்குருக்களின்

அழகுக்கோலங்கள்

பாகம் II

வெளியாகின்றது

கிடைக்குமிடம் :
சோதிட விபாச புத்தகசாலை
பெரியகடை - யாழ்ப்பாணம் (4123)

வெள்ளவத்தையில் கொல்லப்பட்ட

## ரெலோ பிரமுகரான சடலம் வவுனியாவில் தகனம்

வெள்ளிக்கிழமைஇரவு 8மணி அளவில் வெள்ளவத்தையில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட ரெலோ இயக்கத்தின் மத்தியகுழு உறுப்பினரும் கொழும்பு பகுதியின் அரசியல் பிரிவுத் தலைவருமான குருவின் (சுப்பிரமணியம் கிர்த்திராஜ) சடலம் ஞாயிற்றுக்கிழமை காலை வவுனியாவுக்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

கொழும்பிலிருந்து அனுராதபுரம் வரை பொலீஸாரும் அனுராதபுரத்திலிருந்து வவுனியாவரை இலங்கை இராணுவத்தினரும் சடலம் கொண்டுவரப்பட்ட வாகனத்துக்குப் பாதுகாப்பளித்தார்கள்.

பஸ்நிலையப் பகுதியும் பசார் வீதியும் வாழைமரங்கள் நடப்பட்டு தோரணங்களும் கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன.

பொதுமக்களின் அஞ்சலியின் பின்னர் தகனக் கிரியைகளுக்காக சடலம் எடுத்துச் செல்லப் பட்டது. [இ-164]

பிரசைகள்...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

லும் அது, தமிழ் மக்களின நல்வாழ்வுக்கு உதவ அக்கறை எடுக்காமை குறித்து நாம் மிகவும் மனம் வருந்துகிறோம்.

இந்தியாவின் இந்தப் போக்கு தமிழ் பேசும் மக்கள் மத்தியில பெரும் கேள்விக் குறியை உருவாக்கி உள்ளது.

அதனால் அமைதிப் படையினர் நடத்தும் மாநாடுகள் கலந்துரையாடல்களில், யுத்த நிறுத்தம் அறிவிக்கப்படும் வரை, பங்குபற்றுவதில்லை, என முடிவு செய்திருக்கிறோம்.

அதே போல இந்திய அரசு யுத்த நிறுத்தத்தை அறிவித்து பேச்சுவார்த்தைகளை தொடங்கும்வரை, புனர்வாழ்வு புனர் நிர்மாணம் சம்பந்தமான எந்தவித கலந்துரையாடல்களிலும், நடவடிக்கைகளிலும் கலந்து கொள்ளுவதில்லைஎன்றும் முடிவு செய்திருக்கிறோம்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. [அ]

நாளைய...

பாடுகள் மீது நடவடிக்கை எடுக்கும்படி தேர்தல் ஆணையாளரையும் பொலிஸாரையும் பணித்துள்ளனர். கடசி மட்டத்திலும் நடவடிக்கை எடுக்கப்படும்—

இப்படி ஜனாதிபதி சொன்னார். (அ-எ)

அமைதிப்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவின் நல்லெண்ணம், விசுவாசம் புலனாகின்றது என்றும் திரு. டிக்ஷித் சொன்னார்

நடு திரும்பிய படையினர் மத்தியில் அமைதிப்படைத் தளபதி மேஜர் ஜெனரல் கல்கத் பேசினார்

படையினரின் வீர தீரங்களை அவர் பாராட்டினார்.

வடக்கு கிழக்கில் அந்தந்த இடங்களில் காணப்படும் தரை நிலைமைக்கு ஏற்ப இந்திய அமைதிப் படையினரின் எண்ணிக்கை இருக்கும் என்றும் திரு கல்கத் சொன்னார்

பயணிகள் கப்பல் ஒன்றின் மூலம் துருப்புக்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்

போர்க்கருவிகளின் ஒரு பகுதி விஷ்வ விகரம் என்ற சரக்குக் கப்பல் மூலம் அனுப்பிவைக்கப் பட்டது. (உ-எ)

காங்கேசன் --

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

ஆரம்பித்துள்ளது

இப்புதிய பஸ்சேவை காங்கேசன் துறையிலிருந்து காலை 6-20 க்கு புறப்பட்டு யாழ் மத்திய பஸ்நிலையத்தை காலை 7-05 க்கு சென்றடையும்

அங்கிருந்து காலை 7 45 க்கு புறப்பட்டு முல்லைத்தீவை பகல் 12.00 மணிக்கு சென்றடையும். இதே போன்று மற்றோர் பஸ் முல்லைத்தீவிலிருந்து காலை புறப்பட்டு காங்கேசன் துறையை வந்தடையும்

## விரிவுரைகளுக்கு சென்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 8

நேற்று யாழ் பல்கலைக் கழகத்தில், கலை பீட, விஞ்ஞான பீட மாணவர்களுக்கான விரிவுரைகள் ஒழுங்காக நடைபெற்றன.

யாழ் பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் இந்திய அமைதி படையினரால் அகௌரவமாக நடத்தப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக விரிவுரைகளை பகிஷ்கரித்து ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றையும் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன் தினம் நடத்தியது தெரிந்ததே. [அ-5]

யாழ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சகல பகுதிகளிலும் வீதி மறியல் போராட்டம் நடைபெற்று, பின்னர் ஊர்வலமாகத் தொடர்ந்து நாச்சிமார் கோவிலடியில் பொதுக்கூட்டமும் நடைபெறும்,

பொதுக்கூட்டத்தில் பல அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு உரையாற்றுவர் எனவும் அறிவிக்கப் பட்டது.

முதற்கட்டப் போராட்டம் ஓரளவு பிரச்சினையின்றி நடைபெற்றதை யடுத்து இரண்டாம் கட்டப் போராட்டமும் ஆரம்பமாகிறது. இப்போராட்டத்தில் பங்குபற்ற சனசமூக நிலையங்களும், பொதுஸ்தாபனங்களும் முன்வந்துள்ளதாக மேலும் அறிவிக்கப்பட்டது.

இந்த மறியல் போராட்டத்தில் சகல பொது ஜன, வெகுஜன அமைப்புக்களையும் கலந்துகொள்ளுமாறு ஈரோஸ் இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது [அ-10]

## இன்று துக்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரங்கல் செய்தியில்குறிப்பிட்டனர்.

மட்டக்களப்பில் திங்கட்கிழமையன்று அவரது அலுவலகத்தில் வைத்து துப்பாக்கி நபர்களால் கொலை செய்யப்பட்ட வண. பிதா சந்திரா பெர்னாண்டோவின் இறுதிக் கிரியைகள் இன்று (புதன் கிழமை) மூன்று மணிக்கு நடைபெறுகின்றன.

யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களிருந்தும் பலர் இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டது.

அன்னையர் முன்னணி

மட்டக்களப்பு பிரசைகள் குழுத்தலைவர் வண. பிதா சந்திர பெர்னாண்டோவின் மறைவையொட்டி யாழ். அன்னையர் முன்னணி ஆழ்ந்த அதிர்ச்சியையும், அனுதாபத்தையும் தெரிவித்துள்ளது.

[அ]

மக்களை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திய அமைதிகாக்கும் படையினர் கைது செய்தனர்.

கொலை, கொள்ளைகளில் ஈடுபடும் எவருக்கும இந்திய அமைதிப் படை பாரபட்சம் காட்டாது.

இம்மாதிரியானசெயல்களில் ஈடுபட எவரையும் அனுமதிக்கக்கூடாது. ஆகையால் மக்கள் தங்களை மிரட்டுவோர், கொலைகளில் ஈடுபடுவோர் குறித்து தமக்கு அருகிலுள்ள இந்திய அமைதிகாக்கும் படைமுகாமில் உடன் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் — என்று உள்ளது. [அ]

கொம்பியூட்டர் பயிற்சி

BASIC & COBOL

புதிய பிரிவிற்கான வகுப்புகள் ஆரம்பமாகின்றன

பிரிவு-1 : 10-06-1988 [9.00 a.m]
பிரிவு-2 : 17-06-1988 [9.00 a.m]

Diploma in Data Processing & Computer Programming

★ வாரமாகாணத்திலேயே கூடிய நேர Practicals உம் ஒவ்வொரு மாணவர்க்கும் தனிக் கவனமும் செலுத்தப்படுகிறது

★ உலகில் பரவலாக பயன்படுத்தப்படும் IBM - PC Super / XT உட்பட பல சிறப்பான Computer களில் Practicals வழங்கப்படுகிறது.

★ பயிற்சி முடிவில் அங்கீகாரமுள்ள பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்களும். வேலை வாய்ப்பு ஒழுங்குகளும் செய்யப் படும்

IDP

Institute of Data Processing

K. K. S Road — துர்க்காபுரம், தெல்லிப்பழை

(C-5388)

31 ம் நாள் நினைவஞ்சலி



வெற்றிவேற்பிள்ளை யோகேஸ்வரன்

(சமாதான நீதவான்)

| | |
|---|---|
| பூவுலகு 29 9 1942 | பொன்னுலகு 7-5 1988 |

வட்டு தெற்கு
வட்டுக்கோட்டை

(C5400)

ஓராண்டு நினைவஞ்சலி



ஆறுமுகம் சிவசுப்பிரமணியம்

[அப்பன்]

(சங்கத்தடி, இடைக்காடு, அச்சுவேலி)

| | |
|---|---|
| மண்ணில்: 9- 5- 1959 | அநியாய அழிப்பு: 21 5- 1987 |

திதி: 8- 6- 1988

உன் உழைப்பாலும், உயர்ந்த குணத்தாலும் வாழ்ந்து வரும் வேளையில் விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டு எம்மைத் துயரில் ஆழ்த்தி விட்டாய்

அன்னாரின் ஆண்டுத் திவசத்தில் பங்கு பற்றுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

உன் பிரிவால் வாடும்:

பெற்றோர் சகோதர சகோதரிகள்,
மைத்துனன், மருமகன் கருல்,
உறவினர்களும்.
இடைக்காடு சனசமூக நிலைய தண்பர்களும்

(4125)

மரண அறிவித்தல்கள்

## திரு. நெல்லிநாதன் வாமதேவா

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இலங்கை பாறிய உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியும், தமிழர் முன்னேற்றச் சங்கத் தலைவரும், யாழ் பிரசைகள் குழுத் தலைவரும் ஆகிய நெல்லிநாதன் வாமதேவா 5-6 88 அன்று அகாலமரணமானார். இவர் காலஞ்சென்ற ஜீவரெட்ணம (இராசமணி) நாச்சிமார் கோவிலடி கண்மணியின் (U K) அன்புக் கணவரும் காலஞ்சென்ற நெல்லிநாதன் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற அநுராதபுரம் இராசதுரை ரங்கபிள்ளை, நாச்சிமார் கோவிலடி பொன்னுத்துரை வள்ளியம்மையின் மருமகனும், நடேசுவின் பெருமகனும், காலஞ்சென்ற தில்லைநாதன் (மட்டக்களப்பு) காலஞ்சென்ற கனகசபாபதி, காலஞ்சென்ற திருமதி சத்தியபாமா நடராஜா. திருமதி அம்பிகை நடராஜா, திருமதி பராநிதி நடராஜா, திருமதி கமலமா விராகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும். அம்சதேவா (ஜேர்மனி) இன்ப ஜோதி (ஜோதி இன்சிடியூட் நாச்சிமார் கோவிலடி, மதவடி ஒழுங்கை) ஜெயதேவா (Show Wallace and Hedges Colombo-3) சந்திரதேவா (U K) ராஜேஸ்வரி (U K) பானுஸ்ரீநாததேவா (U K) நிர்மலா (U K) ஆகியோரின் அன்புத் தந்தையும். துரை சண்முகராஜன் (பிரதேச சிற்றுயிர் ஆய்வாளர் மலேரியாத் தடை இயக்கம வவுனியா) சந்சனராஜா (U K) ஜெயநாதன் (U K) பரமேஸ்வரி (ஜேர்மனி, புவனேஸ்வரி (ஆசிரியர் உவர்மலை தமிழ் மகா வித்தியாலயம், திருகோணமலை) உமா U K) ஆகியோரின் மாமனாரும், லோயினி கிருஷாயினி. சாமினி கிதஞ்சனு, கயவினி பானுஷா, பிரசாந்தன (ஜேர்மனி) ரஜனனி (திருகோணமலை) சஜித்ரா (திருகோணமலை) அரவிந்தன் (U K) கேசவன் (U K) கோபிகா (U K) கலைச்செல்வன் (U K) யூரன் (U K) திபன் (U K) சபித்தா (U K) ஆகியோரின் பாட்டனும் ஆவார். அன்னாரது பூதவுடல் இன்று 8 6-88 புதன்கிழமை 557/1, K. K. S வீதி, மதவடி ஒழுங்கையில உள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து ஈமக்கிரியைகளுக்காக பிற்பகல் 4 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மருமகன்
துரை சண்முகராஜா

557/1, கே. கே. எஸ் ரோட்
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம். [C 5394]

## கதிர்காமர் இரத்தினசிங்கம்

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் மானிப்பாய் கமலா ஸ்ரோர்ஸ் உரிமையாளருமான கதிர்காமர் இரத்தினசிங்கம் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கதிர்காமர் சின்னம்மா ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை, பார்வதிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும், பொன்னம்மாவின் அன்புக் கணவரும், சிவகணேஷ் சிவகோபி, சிவசத்தியன் - சிவரபணன் ஆகியோரின் அன்புத் தந்தையும் - குணசிங்கம், அமராவதி, ரேவதி கனகம்மா ஆகியோரின் சகோதரரும் வள்ளிப்பிள்ளை, தபபிராசா, சண்முகம், நடராசா, ஆகியோரின் மைத்துனரும் இரத்தினசோதி, ஞானசோதி, யோகம்மா, கனகம்மா முருகானந்தவேள், (குமாரவேல் கம்பனி கொழும்பு) கிருபானந்தவேல், (லண்டன்) செல்வராணி. [லண்டன்] ஆகியோரின் மைத்துனரும், சிவரத்தினம், மெய்கண்ட மூர்த்தி, (Holland) இராசரத்தினம் (இலங்கைபோறிய தபால் அதிபர்] சரவணபவானந்தன் மகாலிங்கம் (லண்டன்) ஆகியோரின் சகலனுமாவார் அன்னாரின் ஈமக்கிரியை இன்று 8-6—1988 புதன்கிழமை, மாலை 4 மணிக்கு மணற்காடு மயானத்தில் நடைபெறும்.

தகவல்;
சி. முருகானந்தன்
புங்குடுதீவு-12

[4130]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2. இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 08-06-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and published by New Uthayan Publications (Pvt) Ltd. 92/2, Navalar Road, Jaffna on Wednesday, 08 th June 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org